

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 50 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 13 – திங்கள்கிழமை 29 செப்டம்பர் 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 50 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 13 - Monday 29 September 2025 - Dak 12 Pages ₹ 5.00




முதமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.9.2025) கரூர் அமராவதி மருத்துவமனைக்கு நேரில் சென்று, கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்தவர்களை சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்து, மருத்துவர்களிடம் அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை விவரங்கள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்,நேரு, எ.வ.வேலு, எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், மா.சுப்பிரமணியன், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், செல்வி ஜோதிமணி எம்.பி., வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.தங்கவேல், மருத்துவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.9.2025) கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று, கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பரப்புரைக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலியானோரின் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

## கூட்ட நெரிசலில் சிக்கி 40 பேர் பலி! இரவோடு இரவாக கரூர் விரைந்த

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நள்ளிரவில் மருத்துவமனையில் அஞ்சலி!

## சிகிச்சை பெறுபவர்களைச் சந்தித்து ஆறுதல்!

**கரூர், செப்.29 –**

**கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழக பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 40 பேர் பலியான துயரச் செய்தி கேட்டு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நள்ளிரவில் கரூர் மருத்துவமனைக்கு விரைந்துச் சென்று பலியானவர்களின் உடலுக்கு கண்ணீர் மல்க மலரஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.**

நேற்று முன்தினம் 27.9.2025 கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் பலர் அனுமதிக்கப்பட்டு வந்த செய்தியை அறிந்த முதலமைச்சர் அவர்கள், உடனடியாக இரவே சென்னை, தலைமைச் செயலகத் திற்கு சென்று, அமைச்சர் பெருமக்கள், உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

மருத்துவ சிகிச்சைக்கான சிறப்பு ஏற்பாடு களை துரிதப்படுத்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் திருச்சி, சேலம் மற்றும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மருத்துவக் குழுக்களு டனும், காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் சட்டம் ஒழுங்கு கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநர் ஆகியோரை அனுப்பிவைத்து போர் கால நடவடிக்கை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட வர்களுக்கு உரிய உதவிகளை மேற் கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.9.2025) கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், தமிழக வெற்றிக் கழகத்தின் கூட்ட நெரிசலில் ஏற்பட்ட உயிரிழப்பு சம்பவம் குறித்தும், காயமடைந்தவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைகள் மற்றும் தேவையான உதவிகள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசு மருத்துவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அதைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள், நேற்று நள்ளிரவே கரூர் மாவட்டத்திற்கு நேரில் சென்றார்.

நேற்று (28.9.2025) அதிகாலையில், முதலமைச்சர் அவர்கள், கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மருத்துவ அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். தற்போது, சிகிச்சை பெற்று வருபவர்களின் விவரங் களையும், தேவைப்படும் உதவிகள் குறித்தும் மருத்துவர்களிடம் கேட்ட றிந்தார்.

### விடுமுறை நாளில் தலைமைச் செயலகத்தில் இரவில் முதல்வர் ஆலோசனை!

கரூரில் தமிழக வெற்றிக் கழகம் நடத்திய பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி பாதிக்கப்பட்டவர்கள் மயங்கிய நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவதாக நேற்று முன்தினம் (27.9.2025) இரவு செய்திகள் தொடர்ந்து வந்தவண்ணமிருந்தன.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சனிக்கிழமை விடுமுறை நாள் என்றாலும்கூட இரவு நேரம் என்றுகூட பாராமல் உடனடியாக தலைமைச் செயலகத்திற்கு சென்று அங்கு அமைச்சர்கள், அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்கி துரிதமாக நிவாரணப் பணியை முடுக்கிவிட்டார்.

**தீவிரச் சிகிச்சைக்கு நடவடிக்கை!**

மேலும், பாதிக்கப்பட்ட வர்கள் ஒவ்வொருவரின் நிலை குறித்து கேட்டறிந்து, தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருபவர் களைத் தொடர்ந்து கண்கா ணிக்க வேண்டும் என்றும், உயிரிழப்புகள் ஏற்படாத வாறு கவனத்துடன் செயல் பட வேண்டும் என்றும் மருத்துவர்களுக்கு அறிவு றுத்தினார். அருகில் உள்ள மாவட்டங்களிலிருந்து வரும் மருத்துவர்கள், செவிலியர்கள் தேவையான மருத்துவ உபகரணங்களு டன் வரவழைக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுடன் ஒருங்கிணைந்து தீவிர சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

பின்னர், கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். கூட்ட நெரிசலில், உயிரிழந் தவர்களின் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, அவர்களின் குடும்பத்தின ருக்கும் ஆறுதல் கூறினார்.

மேலும், முதலமைச்சர் அவர்கள், அமராவதி மருத்துவமனைக்கு நேரில் சென்று அங்கு சிகிச்சை பெற்று வருபவர் களிடம் உடல் நலம் குறித்து விசாரித்தார்.

**விசாரணை ஆணையம்!**

கரூரில் தமிழக வெற்றிக் கழகக் கூட்டத் தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 40 பேர் பலி யாகினர். பலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் அறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் இரவே தலைமைச் செயல கத்தில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரி களுடன் ஆலோசனை நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து பலியானவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ. 10 இலட்சம் நிதி உதவி வழங்கிடவும், மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருவோர்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டார்.

மேலும் இச்சம்பவம் குறித்து முறையான விசாரணை மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை அளிக்க ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் உடனடியாக அமைக்கப்படும் என்றும் முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

**இரண்டு நாட்கள் முதல்வர் நிகழ்ச்சிகள் ரத்து!**

கரூரில் நடைபெற்ற இந்தத் துயரமான சம்பவத்தைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 28.9.2025 மற்றும் 29.9.2025 ஆகிய இருநாட்கள் பங்கேற்க இருந்த அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

அதே போன்று தமிழ்நாடு அரசு சார்பில் இரு தினங்கள் நடைபெற இருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

---

# பலியானவர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சம் நிதி அறிவிப்பு!

## விசாரணை ஆணையம் அமைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, செப். 29 –

கரூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற துயரச் சம்பவம் குறித்து முதல்வர் அவர் கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

நேற்று முன்தினம் (27.9.2025) கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பரப்புரை கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி இதுவரை 8 குழந்தைகள் 16 பெண்கள் உட்பட 40 பேர்கள் உயிரிழந்துள்ள தகவல் அறிந்து சொல்லொண்ணாத் துயரமும் வேதனை யும் அடைந்தேன்.

விலைமதிக்க முடியாத அந்த உயிரி ழப்புகள் நம் அனைவரின் நெஞ்சத்தை யும் உலுக்கியுள்ளது. ஈடு செய்ய முடியாத பேரிழப்பை எதிர்கொண்டுள்ள அந்தக் குடும்பங்களுக்கு என் ஆழ்ந்த வருத் தத்தையும். அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிகிச்சைக்காக மருத்துவமனை களில் அனுமதிக்கப்பட்டுள்ள அனை வருக்கும் சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்க உத்தரவிட்டுள்ளேன்.

மருத்துவ சிகிச்சைக்கான சிறப்பு ஏற்பாடுகளை துரிதப்படுத்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மற்றும் மருத் துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோரை அனுப்பி வைத்துள்ளேன்.

மேலும், திருச்சி, சேலம் மற்றும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலை வர்கள் மருத்துவக் குழுக்களுடன் கரூருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள னர். இந்த துயரகரமான சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா பத்து லட்சம் ரூபாய் முதலமைச்ச ரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும், மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை பெற்று வரும் நபர் களுக்கு தலா 1 இலட்சம் ரூபாயும் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

மேலும் இச்சம்பவம் குறித்து முறை யான விசாரணை மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை அளிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் உடனடியாக அமைக்கப்படும்.

நான் இன்றிரவே கரூர் சென்று மேற்படி துயர சம்பவத்தில் உயிரழந்த வர்களின் குடும்பத்தினரை சந்தித்து, ஆறுதல் தெரிவிக்கவும், மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருபவர் களை சந்திக்கவும் உள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.